[1975 நவம்பர் 7

பார்வையற்ருேர்களுக்கான ஆசிரியர்கள்

***238 வினு—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

சென்னேயில் பார்வையற்ருேருக்குப் போதிக்கும் ஆசிரியர் பயிற்சி பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. வி எம். அண்ணுமலே :** இல்லே.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலேவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது இல்லே என்று சொன்னுர்கள். சென்னேயில் ஜெமினிக்கு அருகில் பார்வை யற்ருேர், குருடர்கள் பள்ளியொன்று தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது, அதற்கு அரசின் மூலம் ஏதாவது ஆதரவு உண்டா? இல்லேயென்ருல் அரசே அதை ஏற்று விரிவுபடுத்துகின்ற செயல் முறையில் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலே :** பேரவைத் தலேவரவர்களே, குருடர்கள் பள்ளி ஜெமினிக்கு அருகில் ஒன்று இருக்கிறது என்று தெரியும் . . .

**[திரு. வை. பாலசுந்தரம் எழுந்திருந்தார்]**

**மாண்புமிகு பேரவைத் தலேவர் :** நீங்கள் உங்களுடைய பதிலேச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலே :** மாண்புமிகு உறுப்பினர் இது தொடர்பாக விண்ணப்பித்துக் கொண்டால் இதுபற்றி ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.